[28th March 1963

நிலைமையை ஒட்டியும் நாஷனல் ஹைவேஸ் வேலைகளுக்கான நிதி நிலைமையையும் மனதில் வைத்துக்கொண்டு, இதைத் தள்ளிப் போட்டு விடலாம் என்ற முடிவுக்கு அரசாங்கம் வந்திருக்கிறது.

அணை கட்டுதல் (ஈரோடு வட்டம்)

*406 கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம் : கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் ஈரோடு வட்டத்திலுள்ள குரங்கன் ஓடையில் அணை கட்டுவது பற்றிப் பரிசீலனை நடந்ததா ?

(இ) அணை கட்டித் தேக்கி புதிய வாய்க்கால் வெட்டுவதன் மூலமாக எத்தனை ஏக்கருக்குப் பாசன வசதி கிடைக்கும் ?

(உ) இதற்காகும் உத்தேசச் செலவென்ன ?

(எ) அணை கட்டும் இடத்திலும், வாய்க்கால் வெட்டுவதிலும் சேதமாவது எத்தனை ஏக்கர் ?

(ஐ) அணைகட்டும் வேலை எப்போது ஆரம்பிக்கப்படும் ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) to (*e*) A scheme is under investigation and only after the investigation is over, other particulars can be furnished.

குழாய்க் கிணறுகள் (உடையார்பாளையம் வட்டம்)

*407 கேள்வி.—திரு. இரா. நாராயணன் : கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உடையார்பாளையம் வட்டம், மணப்பத்தூர் மற்றும் பக்க கிராமங்களில் விவசாயத்தை அபிவிருத்தி செய்ய ஆழக் குழாய் கிணறுகள் அமைக்க அரசாங்கத்திற்கு மனு ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) மணப்பத்தூர் கிராமப் பஞ்சாயத்துத் தலைவரிடமிருந்து இது விஷயமாக 1962 ஜூன் மாதத்தில் மகஜர் ஒன்று பெறப்பட்டது.

(இ) பவர் டிரில் (Powerdrill) யந்திரங்கள் கிடைக்காததால், குழாய்க் கிணறுகள் தோண்டும் திட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை. எனவே, நீர் ஊற்றுக் கிணறுகள் திட்டத்தின்கீழ் கிடைக்கும் கடன் வசதிகளைப் பயன்படுத்திக்கொண்டு நீர் ஊற்றுக் கிணறுகளைத் தோண்ட விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கும்படி பஞ்சாயத்துத் தலைவருக்கு அறிவிக்கப்பட்டது.

(*a*) A representation was received in June 1962 from the President, Manapattur Village Panchayat.

(*b*) As the scheme for sinking of tube-wells has not been taken up for implementation for want of power drill, the President was asked to persuade the ryots to utilise the loan facilities available under the Sub-Artesian Wells Scheme.